47

# தாயுமானவர் கண்ட பொதுமை நெறி

**இரா. ஸ்ரீவித்யா,**
**உதவிப் பேராசிரியர்,**
**சுப்பிரமணிய பாரதியார் தமிழ்மொழி மற்றும் இலக்கியப்புலம்,**
**புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி – 14.**

**ஆய்வுச் சுருக்கம்**

உலகில் தோன்றிய மொழிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்பு வாய்ந்தவை. அவற்றுள் தமிழைப் 'பக்தியின் மொழி' என்பார் தனிநாயகம் அடிகளார். சைவம், வைணவம், கௌமாரம் தொடர்பான நூல்களும்சமணம், பௌத்தம் தொடர்பான இலக்கியங்களும் தோத்திர நூல்களும் சாத்திர நூல்களும் பல்கிப் பெருகியமொழி தமிழ்மொழியாகும். தமிழில் ஏனைய வகைமைகளுக்கான இலக்கியங்கள் தோன்றியிருப்பினும், சமய இலக்கியங்களுக்கான களம் பரந்துபட்டது. அவ்விலக்கியங்கள் உணர்த்தும் தத்துவங்களும் ஆழங்காற்பட்டவை. நுண்மாண் நுழைபுலம் மிக்கவை. அவற்றுள் பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய தாயுமானவர் தத்துவநிலையில் வேதாந்தத்தையும் சித்தாந்தத்தையும் இணைத்துச் சமரச நிலையைக்கண்டவர். எல்லாச் சமயங்களையும் பொதுமை உணர்வுடன் மதித்தவர். சமயவேறுபாடுகளும் காழ்ப்புணர்வும் ஓங்குகின்ற எக்காலத்திலும் தாயுமானவரின் பொதுமைநெறி வழிகாட்டுதற்குரியது. முன்னெடுத்துச்செல்வதற்குரியது. அத்தகைய பொதுமைநெறி தாயுமானவரின் பாடல்களுள் எங்ஙனம் அமைந்திருக்கிறது, அதற்கான சமய, சமூகக் காரணிகள் யாவை என்பதை ஆராய்கிற முயற்சி இக்கட்டுரையில் மேற்கொள்ளப்படுகிறது.

**திறவுச்சொற்கள் –** வேதாந்தம், சித்தாந்தம், தோத்திரம், சாத்திரம், சமயவகைமை

**முன்னுரை**

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் சைவசமயமாகும். இந்தியாவில் தோன்றிய சமயங்கள் பற்பல எனினும், அவற்றுள் காலத்தால் முற்பட்டவை தாய்த்தெய்வ வழிபாடு மற்றும் பசுபதி வழிபாடாகும். சிந்து சமவெளி அகழ்வாராய்ச்சியில் தோண்டி எடுக்கப்பட்ட ஓவியங்கள், முத்திரைகள், களிமண்வடிவங்கள் முதலியவற்றை முன்வைத்து சர்ஜான் மார்ஷல் மற்றும் ஹீராஸ் பாதிரியார் போன்ற அறிஞர் பெருமக்கள் கூறிய கருத்துகள் இதற்கு அரண் சேர்க்கின்றன. ஆரியர்களின் வருகைக்கு முன் இந்தியாவில் நிலவிய சிந்து சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகம் என்பது நடுவுநிலையுடைய வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாகும். அண்மைக்காலத்தில் வெளிவந்த ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்களின் சிந்து சமவெளி ஊர்ப்பெயர் ஆய்வுகளும் இதனை உறுதி செய்கின்றன. எனவே, இமயம் முதல் குமரிவரை பரவியிருந்த சமயமாக, சைவசமயம் விளங்கியிருப்பதைக் காணமுடிகிறது. தாயுமானவர் இந்தச்சைவ மரபை முன்வைத்தாலும், அவருடைய பாடல்களில் வேதாந்தக் கருத்துக்களும் சித்தர்களின் அகவழிபாட்டுக்குரிய கருத்துக்களும்

விரவியிருப்பதைக் காணமுடிகிறது.

**தாயுமானவரின் காலமும் ஆக்கங்களும்**

ஏனைய சமய அடியார்களைப் போன்று, தாயுமானவரின் வரலாறும் சான்றாதாரங்களைவிட, செவிவழிக் கதைகளையே மிகுதியும் சார்ந்துள்ளது. தாயுமானவர் பாடல்களைத் தொகுத்தோரும் உரைஎழுதியோரும் (பூ.வை. கலியாணசுந்தரமுதலியார், வடிவேலுமுதலியார்) முன்னுரையில் குறிப்பிடுகிற செய்திகள், தாயுமானவரின் சீடர் அருளையர் படைத்த அகவல் ஆகியவை ஓரளவு துணை செய்கின்றன. வேதாரண்யத்தில் கேடிலியப்பபிள்ளைக்கும் கஜவல்லி அம்மையாருக்கும் மகவாகத் தோன்றியவர் தாயுமானவர். திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த முத்துகிருஷ்ணநாயக்கர் திருமறைக்காட்டுக்கு வருகை தந்தபோது அவருடைய இறைவழிபாட்டுக்குத் துணைநின்ற கேடிலியப்பபிள்ளையின் பண்பையும் திறமையையும் அறிந்து தம்முடைய அரசில் பெருங்கணக்கர் (அன்று இப்பொறுப்பு பெரியசம்பிரதி என்றழைக்கப்பட்டது.)பொறுப்பை அளிக்க, கேடிலியப்பபிள்ளையின் குடும்பம் வேதாரண்யத்திலிருந்து திருச்சிக்கு இடம்பெயரும் சூழல் உருவாயிற்று. அங்குச் சிராப்பள்ளி குன்றுடையானின் திருவருளால் மகப்பேறு உண்டாகியதால், இறைவனின் பெயரால் தாயுமானவர் எனத்தன் மகனுக்குப் பெயரிட்டு வளர்த்தார். இளமையிலேயே தாயுமானவர், இலக்கியம், தருக்கம், பன்னிருதிருமுறை, பட்டினத்தார் பாடல்கள் முதலியவற்றை ஆழ்ந்து கற்றார். தந்தையாருக்குப் பின் பெருங்கணக்கர் பொறுப்பேற்ற தாயுமானவரின் உள்ளம் இறை சிந்தனையில் ஆழ்ந்திருந்தது. மௌனகுருவின் பரிசதீட்சை பெற்றுத் தாயுமானவர் அவரிடம் சிவஞானசித்தியாரையும் பயின்றார். இக்காலக்கட்டத்தில், திருவருள்விலாசப் பரசிவ வணக்கம், பொருள் வணக்கம், பரிபூரணஆனந்தம், சின்மயானந்த குருபதிகம், மௌன குருவணக்கம் முதலியபாடல்களைப் பாடியருளினார். தாயுமானவரால் ஈர்க்கப் பெற்ற அரசிமீனாட்சியிடமிருந்து தப்ப எண்ணி (இதற்கான சான்றாதாரங்கள் எந்த நூல்களிலும் அளிக்கப்பெறவில்லை என்பது குறிக்கத்தகுந்தது.) அரசிக்கு அறம் கூறிவிட்டு, அருளைய்யபிள்ளையுடன் நல்லூருக்குச் சென்ற நிலையில் கருணாகரக்கடவுள் பதிகம் பாடினார். பின்விராலிமலையில் சித்தர்களுடன் நெருங்கிப் பழகும்வாய்ப்பு ஏற்பட்ட நிலையில் சித்தர்கணம், ஆனந்தமானபரம், சுகவாரி முதலிய பதிகங்களைப் பாடிய பின், அங்கிருந்து புதுக்கோட்டை சென்ற நிலையில் பெரிய நாயகியம்மைப் பதிகத்தையும் பின் இராமேசுவரம் சென்று மலைவளர் பதிகத்தையும் பாடியருளினார்.

தமையனாரின் வற்புறுத்தலாலும், மௌனகுருவின் வாக்கின்படியும் திருமறைக்காட்டிற்குற்குச் சென்ற தாயுமானவர் மட்டுவார் குழலியை மணந்து சிலகாலம் இல்லறவாழ்க்கையில் ஈடுபட்டார். மனைவியை இழந்த நிலையில், தனது குழந்தை கனகசபாபதியைத் தமையனார் வசம் ஒப்படைத்துத் துறவு மேற்கொண்டார். திருமறைக்காட்டிலிருந்து மீண்டும் திருச்சி சென்ற தாயுமானவர், மௌனகுருவின் அருள்பெற்று அவரிடம் சிலகாலம் தங்கியபின் அவரிடமிருந்து விடைபெற்று, இராமநாதபுரம் சென்று, அங்கு காட்டூரணி என்னுமிடத்தில் புளியமரநிழலில் நிட்டையில் ஆழ்ந்து இறைவனடி சேர்ந்ததாக, அவருடைய வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. தாயுமானவரின்

ஆக்கங்களைத் தொகைப்படுத்துகிற தனிப்பாடல் வருமாறு-

**விண்ணுறுந்தே வர்கள்முனிவர் கணங்கள்சித்தர்**
**புகழ்மௌனி வியப்பால் ஞானத்**
**தண்ணுறுதண் டமிழ்மாலை ஐஞ்நூற்றெண்**
**பத்தேழுந் தாயு மானோன்**
**எண்ணுறங்கண் ணிகள் எண்ணூற் றறுத்தைந்து**
**அகல்வண்ணம் இரண்டும் பாடி**
**மண்ணுறுநால் வகைமாந்தர் தமக்காகப்**
**பக்குவர்பால் வைத்தான் அன்றே**

| | | |
|---|---|---|
| 1 முதல் 39 முடியபாடல்கள் | – | 587 |
| 40 முதல் 54 முடியகண்ணிகள் | - | 863 |
| அகவல், வண்ணம் | - | 2 |
| | ஆக- | --------------- |
| | | 1452 |

--- (வடிவேலு முதலியார் (உ.ஆ), 2011-15)

**தாயுமானவரின் பாடல்களில் வேதாந்த – சித்தாந்த சமரசநிலை**

**அ) வேதாந்தம் –** சைவசித்தாந்தம் மட்டுமின்றி, வேதாந்தமும் தென்னிந்தியாவோடு தொடர்புடையதேயாகும். ஏகான்மவாதமாகிய அத்வைதத்தை நிலைநிறுத்திய சங்கரர், தமிழ்நாடு – கேரள எல்லைப்பகுதியான கல்லடியில் தோன்றியவர். அத்வைதத்தை மறுத்து எழுந்த விசிஷ்டாத்வைதத்தைத் தோற்றுவித்த இராமானுஜரும் தமிழ்நாட்டினரேயாவார். இவ்விரண்டு தத்துவமுறைகளையும் மறுத்து, மூன்றாவது தத்துவமுறையாகிய த்வைதத்தைத் தோற்றுவித்த மத்துவரும் தென்னிந்தியரே. இதனால் தென்னிந்தியாவில் பதினான்காம் நூற்றாண்டிலிருந்து வேதாந்த விசாரணை தீவிரமாக நடைபெற்றுவந்ததை அறியமுடிகிறது. (ஆ. வேலுப்பிள்ளை, 2011: ப. 177)

வேதங்களின் இறுதியில் காணப்படுவதால் உபநிடதங்கள் வேதாந்தம் என அழைக்கப்படுகிறது. வேதாந்தத்தில் இருவேறு கருத்துப்போக்குகள் நிலவுகின்றன. ஒன்று, பிரமம், ஆன்மா, உலகு ஆகியயாவும் ஒன்றெனக் கூறுவதாகும். (இதுவே சங்கரின் அத்வைதக் கொள்கையாகும்.) மற்றொன்று, இவற்றைப் பிரித்துணர்வதாகும். (த்வைதம், விசிஷ்டாத்வைதம்போல்வன)

பிரமம் ஒன்றே உள்பொருள் (சத்) என அத்வைதவேதாந்தம் கூறுகிறது. பிரமத்திற்கு அயலாகவோ, பிரமம் இன்றியோ உலகிற்குத் தனித்த இருப்பு இல்லை. இவ்வுலகு, பிரமத்தைச் சார்ந்து விளங்குகிறது என்பதற்குக் கயிற்றரவு எடுத்துக்காட்டைச் சங்கரர் பயன்படுத்துகிறார். இவ்வுலகு பொய்த்தோற்றம் (மித்தை) உடையது என்பது அவர்கருத்து. கயிறு உள்ள இடத்தில்

தோன்றுகிற அரவு உள்ளதுமன்று, இல்லதுமன்று. நன்கு ஆராயும்பொழுது கயிறு ஒன்றே புலனாகின்றது. அரவு புலனாவதில்லை. அதுபோல, அறிவொளி பெருகும்பொழுது இவ்வுலகு பிரம்மத்தின் வெளிப்பாடு என்பது புலப்படுகிறது. பிரபஞ்சத்தோற்றம், முழுமையையும் மாயை மூடுகிறது. இந்த அவித்தையிலிருந்து விடுபடும் பொழுது ஜீவனும் பரம்பொருளும் ஒன்றே (தத், த்வம், அசி) என்ற ஞானம் கைகூடுகிறது (சர்வபள்ளிஇராதாகிருஷ்ணன் (ப.ஆ), 1970 :பக். 486-488) இதுவே அத்வைதம் பற்றிய சுருக்கமான விளக்கமாகும். சங்கரருக்கு முன்பே கோவிந்தரும் கௌடபாதரும் இத்தகைய கருத்துக்களை முன்வைத்துள்ளனர். தாயுமானவரின் பாடல்களில் இத்தகைய வேதாந்தக்கருத்துக்களைக் காணமுடிகிறது.

**தந்தைதாய் மகவுமனை வாழ்க்கை யாக்கை**
**சகமனைத்தும் மௌனியருடன் அழைத்தபோதே**
**இந்திரசாலங் கனவு கானல் நீராய்**
**இருந்ததுவே இவ்வியற்கை யென்னே யென்னே (தந்தைதாய், 1, ப.432)**

மௌனாசிரியருடைய திருவருளினால் தந்தை, தாய், பிள்ளைகள், மனைவி, வாழ்வு, உடல், உலகம்யாவும் இந்திரசாலம் போலவும், கனவு போலவும் கானல்நீர் போலவும் இருந்தது என்னே? என்று வியக்கும்போது, இவ்வுலகம் மாயை என்ற வேதாந்தக் கருத்து புலப்படுகிறது.

**பண்ணேன் உனக்கான பூசையொரு வடிவிலே**
**பாவித்திறைஞ் சவாங்கே**
**பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தியப்**
**பனிமல ரெடுக்கமனமும்**
**நண்ணே னலாமலிரு கைதான் குவிக்கவெனி**
**னாணுமென்னு ளம்நிற்றிநீ**
**நான்கும் பிடும்போ தரைக்கும் பிடாதலால்**
**நான்பூசை செய்யன்முறையோ**
**விண்ணே விணாதியாம் பூதமே நாதமே**
**வேதமே வேதாந்தமே**
**மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்**
**வித்தே யவித்தின்முளையே**
**கண்ணே கருத்தே யெனெண்ணே யெழுத்தே**
**கதிக்கான மோனவடிவே**
**கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு**
**கருணாகர க்கடவுளே. (கருணாகரக்கடவுள், 52, ப.96)**

என்று தாயுமானவர் பாடும் பொழுதும் வேதாந்தத்தின் சாரம் புலப்படுகிறது. இதன்பொருள்- ஆகாயமே! ஆகாய முதலாகிய ஐந்துபூதமே! நாதத்துவமே! வேதமே! வேதமுடிவே! மேன்மை

பொருந்திய கேள்வியே! கேள்வியாகிய நிலத்தில் முளைக்கும் விதையே! அந்த விதையினின்று உண்டாகும் முளையே! இரு கண்களே! எண்ணமே! என்னுடைய தருக்கமே! இலக்கணமே! முத்திக்குக் காரணமாகிய மௌனரூபமே! நினைத்தற்கரிய சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடுகின்ற கருணைக்குத் தாயகமாகிய கடவுளே! உனக்குப் பூசனை செய்வதற்காக மலர் பறிக்க எண்ணினால், அம்மலர் எல்லாம் நீயே இருக்கின்றாய். அந்த மலரைப் பறிக்க மனமும் வரவில்லை. இரண்டு கைகளைக் குவித்து வணங்கலாம் என்றால், நீ எப்பொழுதும் என் மனதுள்ளே வீற்றிருக்கிறாய். ஆகையால் நான் கும்பிடுவது அரைக்கும்பிடு ஆகிறது. இவ்வாறு நான் பூசை செய்வது முறையோ? என்கிறார் தாயுமானவர். பரம்பொருள் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பதை இப்பாடல் தெளிவுறுத்துகிறது.

**ஆ) சைவ சித்தாந்த தத்துவம்-** தமிழ்நாட்டில் விளங்கும் சைவசமயம், சைவ சித்தாந்தம் என அழைக்கப்படுகிறது. சைவ சமயத்தில் முடிந்தநிலை (அ) முடிந்தமுடிபு என்பது இதன் பொருள். சித்தாந்தமல்லாத கொள்கைகளை புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், அகச்சமயம் என நான்கு வகைகளாகத் தொகுத்துள்ளனர். சைவசமயக்குரவர்கள் பாடியவை தோத்திரநூல்கள் என்றால், மெய்கண்டதேவர், அருணந்திசிவாச்சாரியார் முதலிய சந்தனாச்சாரியார்கள் பாடியவை சாத்திர நூல்களாகும். திருவுந்தியார் முதலாக சங்கற்ப நிராகரணம் ஈறாக உள்ள சித்தாந்தச் சாத்திரங்கள் பதினான்காகும். மெய்கண்டாரது சிவஞானபோதம் சைவசித்தாந்த மெய்ப்பொருளியலுக்கு அடிப்படையான நூலாகும். அருணந்தியாரது சிவஞானசித்தியார் பரபக்கமாக புறச்சமயங்களின் குறைகளையும் சுபக்கமாக சைவசித்தாந்தத்தின் கொள்கைகளையும் தெளிவுறுத்துகிறது. சித்தாந்தக் கருத்துக்களின் சாராம்சத்தையும் வேதாந்தத்திற்கும் சித்தாந்தத்திற்கும் உள்ள வேறுபாடுகளையும் பின்வருமாறு தொகுத்துக்கொள்ள முடிகிறது.

1. பதி (இறைவன்), பசு (உயிர்), பாசம் (கட்டு) ஆகிய முப்பொருட்கள் சைவசித்தாந்தத்தின் முதன்மையான பொருட்களாகும். சித்தாந்தத்தைப் பொறுத்தவரை இறை, உயிர், உலகம் ஆகிய மூன்றும் என்றுமுள்ள பொருட்கள். வேதாந்தத்திற்கு உலகு இல்பொருள். சித்தாந்தத்திற்கு உலகு உள்பொருள். வேதாந்தத்திற்குக் கடவுள் முதற்காரணர். சித்தாந்தத்திற்குக் கடவுள் நிமித்தகாரணர்(இயக்குங் காரணர்). சித்தாந்தம் பரப்பிரம்ம பரிணாம வாதத்தை அடிப்படையாகக் கொண்டதன்று; பிரகிருதி பரிணாம வாதத்தை அடிப்படையாகக் கொண்டது. இதனை விளக்குவதற்கு ஓர் உவமை பயன்படுத்தப்படுகிறது. மண்குடத்திற்கு முதற்காரணமாவது போல, மாயை உலகத்திற்கு முதற்காரணமாகும். என்றாலும் மண்தானே குடமாகிவிடாது. அதனைக் குடமாக்குவதற்குக் குயவனாகிய கருத்தா (கடவுள்) தேவை. அதுபோல, இந்த மாயையிலிருந்து உயிர்கள் முத்தி பெறுவதற்காக, இறைவன் உலகைப் படைக்கிறான். சூரியனால் தாமரை மலர்கிறது; சூரியகாந்தம் நெருப்பைக் கக்குகிறது; நீர் ஆவியாய் மாறுகிறது. சூரியனால் சில தாமரைகள் மொக்காகின்றன; சில மலர்கின்றன; சில உதிர்கின்றன. அதனால் சூரியனுக்கு எந்தப் பாதிப்புமில்லை. அதுபோல, உலகத்தில் எது நேர்ந்தாலும் அதன் பாதிப்பு இறைவனுக்கு நேர்வதில்லை. கடவுள் தன்மை விகாரம் அடையாதது; மாறாதது; நிலைத்தது. இறைவனுடைய அவதாரக் கொள்கையைச் சித்தாந்திகள் ஏற்றுக்

கொள்வதில்லை. மற்றதேவர்கள் பிறப்பு, இறப்பு, இன்ப துன்பங்களுக்கு ஆட்பட்டாலும் சிவன் இவைகட்கு உட்படுவானிலன் எனச் சிவஞானசித்தியார் தெளிவுறுத்துகிறது. சிவன் கருமம் உடையவன் அல்லன். கருமம் இல்லாமல் அவதாரம் அவனுக்கு ஏற்படுவது இல்லை.

**ஆதியந்தங் காட்டாதமுதலா யெம்மை**

**அடிமைக்கா வளர்த்தெடுத்த அன்னைபோல**

**நீதிபெறும் குருவாகி மனவாக் கெட்டா**

**நிச்சயமாய்ச் சொச்சமதாய் நிமலமாகி (பொருள்வணக்கம், பா.24)**

- என்று தாயுமானவர் இறைவனை ஆதியந்தமில்லாத முதற்பொருள் என்றும் செவிலித்தாய்போல உயிர்களை அடிமை கொள்வதற்காகவேவளர்த்து, நீதியையுடைய குருவாகியும் மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாத உண்மைப் பொருளாகவும் விளங்குபவன் என்னும்போது, சித்தாந்தக் கொள்கை நன்கு வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

பிறவிச்சுழலில் வரும் உயிரே ஒருவடிவம் கொள்கிறது. எனவே சிவனுக்கு ஒருவடிவம், ஒருடல் என்பது இல்லை. உயிரை உய்யச் செய்வதற்கு எந்தெந்த வடிவங்களில் தோன்ற வேண்டுமோ, அந்தந்த வடிவங்களில் தோன்றுபவன் இறைவன்(சிவன்).தன்னை வழிபடும் அடியார்கள் எந்த உருவத்தில் வழிபடுகிறார்களோ, அந்த உருவத்தில் காட்சியளிப்பவன் இறைவன். அவ்வாறு உயிர்களுக்கு அருள்செய்யும் அவனுடைய உயர்ந்த வடிவங்களுள் ஒன்று குருவடிவாகும். (சர்வபள்ளி இராதாகிருஷ்ணன், 1970:பக். 688-690) சுத்த, அசுத்ததத்துவங்களின் அடிப்படையில் 36 வகையான தத்துவங்களைச் சைவசித்தாந்தம் விளக்குகிறது. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் உயிரோடு அநாதியாய்ச் சேர்ந்திருப்பன. உயிரினை நெல், உமி, தவிடு போல வெவ்வேறாகக் கலந்து பந்தித்திருப்பன. இறைவனின் திருவருளால் இந்த மலங்களிலிருந்து உயிர் விடுபட்டு முத்திநிலையை அடைகிறது.

உயிரின் முத்திநிலைகள் நான்கு நெறிகளால் அடையப் பெறுகிறது. அந்நெறிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகும். அவை முறையே தாச மார்க்கம், சத்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் என அழைக்கப்படுகிறது. சரியை, கிரியை, யோகத்தால் உயிர்கள் முறையே சாலோகம், சாமீபம், சாரூபம் ஆகிய மூன்று நிலைகளை அடைகின்றன. இம்மூன்று நிலைகளும் உயிர் இறைத்தன்மை அடைவதற்கான முற்சாதனங்களாகும். சன்மார்க்க நிலையில்தான் உயிர் இறைவனோடு சேர்கின்ற சாயுச்சிய நிலையைஅடைகிறது. இந்தப் படிநிலையைத் தாயுமானவர்,

**விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்**

**அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே. (பராபரக்கண்ணி, 792)**

என்று அரும்பு, மலர், காய், கனி எனக் குறிப்பிடுகிறார். தாயுமானவரின் பாடல்களில் சித்தாந்தக் கருத்துக்கள் விரவியிருப்பினும் வேதாந்த, சித்தாந்த சமரச நிலையை வலியுறுத்தும் பாங்கு குறிப்பிடத்தகுந்ததாகும்..

**வேதாந்தம் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும்**

**நாதாந்த மோன நலமே பராபரமே. (பராபரக்கண்ணி, 841)**

வேதாந்த,சித்தாந்தக் கருத்துக்களை வேறுவேறாகக் கருதாத பெரியோர்கள் நாதாநந்தத்தில் விளையும் மௌனநலத்தைக் கண்டு அகக்கண் களிப்பர் எனக்கு றிப்பிடுகிறார் தாயுமானவர்.பல்வேறு சமயங்களையும் படைத்தருளிய இறைவன் மக்கள் தங்களுக்குள் முரண்படாதபடி, சமயங்கள் எல்லாவற்றையும் ஒப்பநோக்கும் நல்லுணர்வினை, சமயங்கடந்த சமரசநெறியை வகுத்தருளினான் என்பதை,

**சைவமுதலாம் அளவில் சமயமும் வகுத்துமேற்**

**சமயங் கடந்த மோன சமரசம் வகுத்த நீ (சின்மயானந்தகுரு, 4)**

என்கிறார் தாயுமானவர்.பார்க்குமிடந்தோறும் சற்றும் பிரிதலில்லாமல் நிறைந்திருக்கின்ற பரிபூரணவின்பமே! நானென்று சொல்லுந்தன்மை, உன்னையல்லாமல் இல்லாததன்மையால், உனக்கு வேறல்லாதவனாயிருக்கிறேன். ஆதலால் எல்லாக்காலமும் என்னுடைய செய்கைகள் உன்னுடைய செய்கைகளேயாகும். இந்த நிலையே வேதாந்த, சித்தாந்தங்களுக்கான பொதுவான இயற்கையாகும் என்பதைத் தாயுமானவர்,

**சந்ததமும் எனதுசெயல் நினதுசெயல் யானெனும்**

**தன்மைநினை யன்றியில்லாத்**

**தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த**

**சமரசசுபாவ மிதுவே (பரிபூரணானந்தம், 8)**

என்கிறார். ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்று திருமூலர் எல்லாச் சமயங்களையும் வழிபாட்டாளர்களையும் ஒப்பக்கருதும் பொதுமை நெறியை வலியுறுத்தியுள்ளார்.

**ஒன்றது பேரூர் வழியா றதற்குள**

**என்றது போல இருமுச் சமயமும்**

**நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்**

**குன்று குரைத்தெழு நாயை ஒத்தார்களே (திருமந்திரம், 1558)**

என்று திருமூலர், ஒருபேரூரை அடைவதற்கான ஆறுவழிகளைப் போன்றதே அறுசமய நெறிகளாகும் என்பதுடன், தன்னுடைய சமயம் நன்று, பிறர் சமயம் தீது என்றுரைப்பவர்கள் குன்றைப் பார்த்துக் குரைக்கும் நாயைப் போன்றவர்கள் என்கிறார்.தாயுமானவரும் இப்பொதுமை நெறியை,

**வேறுபாடு சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்**

**விளங்குபரம் பொருளேநின் விளையாட்டல்லால்**

**மறுபடும் கருத்தில்லை; முடிவில் மோன**

**வாரிதியில் நதித்திரள் போல் வயங்கிற்றம்மா.(கல்லாலின், 25)**

என்று எல்லாச் சமயங்களும் இறைவனின் திருக்கூத்தே அன்றி வேறில்லை என்பதையும் வேறுபட்ட இடங்களில் இருந்து புறப்பட்ட நதிகளெல்லாம் வந்து கலக்கும் இடம் கடலாக இருப்பது போல, எல்லாச் சமயங்களும் சங்கமிக்கின்ற இடம் பரம்பொருளாகும் என்கிறார் தாயுமானவர்.

**தாயுமானவரின் பொதுமை நெறிக்கான சமூகக்காரணிகள்**

'மறுபிறப்பு இல்லெனும் மடவோரும் சேரார் 'என்று உலோகாயதரை மடவோர் எனப் பரிபாடல் குறிப்பிடுவதிலிருந்து சமயக்காழ்ப்புணர்வு பிற்காலச் சங்க இலக்கியத்தில் தொடக்கம் பெற்று, காப்பியங்களில் வளர்ந்து, பக்தி இலக்கியக் காலக்கட்டத்தில் உச்சம் பெற்றது எனலாம். சிலப்பதிகாரத்தில் மாங்காட்டுமறையோனுக்குக் கவுந்தியடிகள் அளிக்கும் பதிலுரையில் சமணத்திற்கும் வைதீகத்திற்குமான முரண்பாட்டைக் காணமுடிகிறது. அதுபோல் பௌத்த காப்பியங்களான மணிமேகலை மற்றும் குண்டலகேசியில், சமண மற்றும் வைதிக வெறுப்புணர்வை அடையாளங் காணமுடிகிறது. (அழகிரிசாமி, வீரா. 1999 ப. 157) ஒவ்வொரு பதிகத்தின் பத்தாவது பாடலிலும் சமண, பவுத்தர்களைக் கண்டனம் செய்வதை வழக்காகக் கொண்டிருந்தார் ஞானசம்பந்தர். சைவ அடியார்களில் ஞானசம்பந்தர், நாவுக்கரசர் பாடல்களிலும் ஆழ்வார்களில் திருமழிசையாழ்வார், திருமங்கை ஆழ்வார் பாடல்களிலும் புறச்சமய வெறுப்பினைக் காண முடிகிறது. இலங்கையில் சைவத்துக்கும் கத்தோலிக்க கிறித்துவத்துக்குமான முரண்பாட்டைக் காணும் பொழுது இருபதாம் நூற்றாண்டுவரை இந்தச் சமயப் பகைமையுணர்ச்சி நீடித்திருப்பதை உணர முடிகிறது. இந்நிலையில் நாயக்கர்காலத்தில் வாழ்ந்த தாயுமானவரின் பாடல்களில் சமயப் பொதுமையுணர்ச்சி வலியுறுத்தப்படுவதற்குச் சமயக் காரணங்களுடன் சில சமூகக்காரணிகளும் உள.

நாயக்கர் காலத்திலும் சைவ, வைணவ முரண்பாடுகள் இருந்ததைச் சில வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில், தில்லை நடராசர் கோவிலில் கோவிந்தராஜர் சந்நிதியைச் சீரமைப்பு செய்தபோது, சைவர்கள் பெருமாள் திருவுருவத்தை அங்குவைக்கக் கூடாதெனக் கிளர்ச்சி செய்து கோபுரத்தற் கொலைகளில் ஈடுபட்டுள்ளனர். என்றாலும் தொடர்ந்து அறப்பணியைக் கிருஷ்ணப்ப நாயக்கர் செய்து முடித்துள்ளார். நாயக்க மன்னர்கள் சைவம், வைணவம், இசுலாம், கிறித்துவம் என அனைத்துச் சமயங்களுக்கும் ஆதரவளித்துள்ளனர். நாயக்கர் காலச் சிற்பங்களிலும் வியங்களிலும் கூடச் சமய ஒருமைப்பாட்டைக் காண முடிகிறது. திருமால் கோவில்களில் சிவன் தொடர்பான சிற்பங்களும் சிவன் கோயில்களில் திருமால் தொடர்பான சிற்பங்களும் காணப்படுகின்றன. திருப்புடைமருதூர் நாறும்பூநாதர் கோயிலிலும் சமயப் பாகுபாடின்றி சைவ, வைணவ ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. சிற்றிலக்கியங்களும் தலப்புராணங்களும் பெருகிய இக்காலக்கட்டத்தில் தோன்றிய பள்ளு இலக்கியங்களும் அம்மானை நூல்களும் சைவ, வைணவ ஒருமைப்பாட்டை வலியுறுத்துவதைக் காணமுடிகிறது. (பாலுசாமி. சா., 2013 145-152) இத்தகைய சமூகக்காரணிகளும் திருமூலர் வழிவந்த சன்மார்க்க நெறியும் தாயுமானவரின் பாடல்களில் உள்ள பொதுமைநெறிக்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

**தொகுப்புரை**

இந்து சமயம் என ஒற்றைப் பெயரில் அழைக்கப்படும் சமயநெறிக்குள் ஒன்றுக் கொன்று முரண்படுகிற தத்துவக் கருத்துக்கள் ஊடாடியிருக்கின்றன. ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னரே இந்த ஒற்றைப் பெயரிடல் வரலாற்றில் அரங்கேறியிருக்கிறது. இசுலாமிய, கிறித்துவ

சமயங்களை எதிர்கொள்வதற்கு தத்துவநெறிகளுக்குள் சமரசங்காண வேண்டிய சமூகச்சூழல் பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து உருவாகத் தொடங்கியதைப் பள்ளுஇலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. சைவ, வைணவம் மட்டுமல்லாமல் சிறுதெய்வங்களையும் பெருந்தெய்வத்துடன் இணைக்கின்ற முயற்சியும் இக்கட்டத்தில் ஏற்படுகிறது. இத்தகைய சமூகக்காரணிகளும் திருமூலர் காலந்தொட்டு வருகின்ற சன்மார்க்க நெறியில் எல்லாச் சமயங்களையும் ஒப்பநோக்கும் பொதுமை நெறியும் தாயுமானவரின் சமயசமரச நோக்கிற்குக் காரணமாக அமைகிறது. அதன் அடுத்த கண்ணியாக சமரசசுத்தசன்மார்க்கத்தை நிலை நிறுத்திய திருவருட்பிரகாச வள்ளலார் விளங்குகிறார். சமய இலக்கியங்களில் ஒருபக்கம் புறச்சமய வெறுப்பு காணப்படினும், மறுபக்கம் எல்லாச் சமயங்களும் அடிப்படையில் ஒன்றே எனக்கருதும் சமரச உணர்வும் வெளிப்படுவதைத் தாயுமானவர் பாடல்கள் உணர்த்துகின்றன. வேற்றுமை உணர்வு மேலோங்குகிற எந்தக் காலத்திலும் வழிகாட்டும் ஒளிவிளக்காகத் தாயுமானவர் பாடல்கள் விளங்குகின்றன.

**துணைநூற்பட்டியல்**

1. அழகிரிசாமி .வீரா., தமிழக வரலாற்றில் சமயப்பூசல், காந்தி மீடியா சென்டர், மதுரை. 1999

2. இராதாகிருஷ்ணன், சர்வபள்ளி, (ப.ஆ)கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருள் இயல் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம். 1970.

3. பாலுசாமி .சா., நாயக்கர் காலக் கலைக் கோட்பாடுகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில். 2013

4. வடிவேலு முதலியார் (உ.ஆ). தாயுமானசுவாமிகள் பாடல்கள் மூலமும் உரையும், பூம்புகார் பதிப்பகம், சென்னை. 2011

5. வேலுப்பிள்ளை, ஆ. தமிழர் சமயவரலாறு, குமரன் புத்தக இல்லம், சென்னை. 2011